

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேற்று முன்தினம் (10.07.2024) சென்னை, மேற்கு மாம்பலம், பாஷ்யகார ஆதி சென்ன கேசவப் பெருமாள் திருக்கோயிலில் ரூ.59.40 இலட்சம் மதிப்பீட்டில் புதிய மரத்தேர் உருவாக்கும் பணிகளை தொடங்கி வைத்தார். உடன் மண்டல இணை ஆணையர் திருமதி கி.ரேணுகாதேவி, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி, மாநகராட்சி மன்ற உறுப்பினர் எம்.ஸ்ரீதர், திருக்கோயில் செயல் அலுவலர் கே.செந்தில் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சிதம்பரத்தில் - கனகசபை மீதேறி தரிசனம் செய்ய அனுமதி

# சமூக நீதியை நிலைநாட்டுகின்ற அரசாக திராவிட மாடல் அரசு திகழ்கிறது!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேட்டி!

சென்னை, ஜூலை 12- முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று முன்தினம் (10.07.2024) சென்னை, வியாசர்பாடி, இரவீஸ்வரர் திருக்கோயிலில் ரூ.1.98 கோடி மதிப்பீட்டிலான திருப்பணிகளையும், மேற்கு மாம்பலம், பாஷ்யகார ஆதி சென்ன கேசவப் பெருமாள் திருக்கோயிலில் ரூ.59.40 இலட்சம் மதிப்பீட்டில் புதிய மரத்தேர் உருவாக்கும் பணிகளையும் தொடங்கி வைத்தார்.

பின்னர், மேற்கு மாம்பலத்தில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :-

முதலமைச்சர் அவர்கள் ஆட்சி ஏற்பட்ட பிறகு, இந்து சமய அறநிலைத்துறைக்கு திராவிட மாடல் ஆட்சி ஒரு பொற்கால ஆட்சி என்று பறைசாற்றும் வகையில் எங்கு பார்த்தாலும் திருப்ப ணிகள், குடமுழுக்குகள், தேர்த் திருவிழாக்கள், தெப்ப உற்சவங்கள், பக்தர்களுக்கான அடிப்படை வசதிகள் என பல்வேறு திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஒரு கால பூஜைத் திட்ட திருக்கோயில்களுக்கு வைப்புநிதி ரூ.2.50 லட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளதோடு, மாதந்தோறும் அத்திருக்கோயில்களின் அர்ச்சகர்களுக்கு ரூ.1,000 ஊக்கத்தொகை யாக வழங்கப்பட்டு வருகிறது. ஒருகால பூஜைத் திட்ட அர்ச்சகர்களின் குழந்தைகளின் உயர்கல்வி பயில 400 நபர்களுக்கு கடந்தாண்டு தலா ரூ.10,000 கல்வி உதவித்தொகையாக வழங்கப்பட்டது. இந்தாண்டு 500 மாணவர்களுக்கு வழங்கிட முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். 2,500 கிராமப்புறத் திருக்கோயி ல்கள் மற்றும் 2,500 ஆதிதிராவிடர்/பழங்குடியினர் வசிக்கின்ற பகுதிகளில் இருக்கின்ற திருக்கோயில்கள் என 5,000 திருக்கோயில்களுக்கு ரூ.100 கோடி திருப்பணிக்கு வழங்கப்பட்டுள்ளது.

இன்றைய தினம், மேற்கு மாம்பலம், பாஷ்யகார ஆதி சென்ன கேசவப் பெருமாள் திருக்கோயிலில் ரூ.59.40 இலட்சம் மதிப்பீட்டில் புதிய மரத்தேர் உருவாக்கும் பணிகளை தொடங்கி வைத்தோம். இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு 97 திருக்கோயில்களுக்கு ரூ.58.82 கோடி மதிப்பீட்டில் புதிய மரத்தேர் உருவாக்கும் பணிகளும், ரூ.13.38 கோடி மதிப்பீட்டில் 50 மரத்தேர்களில் மராமத்துப் பணிகளும் மேற்கொள்ள ப்பட்டு வருகின்றன.

இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு தான், ஆட்சியின் மீதும் இந்து சமய அறநிலையத்துறையின் மீதும் வைத்திருக்கின்ற நம்பிக்கையின் காரணமாக உபயதாரர்கள் இதுவரை 920 கோடி ரூபாயை வழங்கி இருக்கின்றார்கள். திருக்கோயில் வாடகை நிலுவைத் தொகை 720 கோடி ரூபாய் வசூலிக்கப்பட்டிருக்கின்றது. அதே போல் எந்த காலத்திலும் இல்லாத அளவிற்கு இந்து சமய அறநிலையத்துறைக்கு அரசு மானியமாக ரூ.900 கோடியை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இதுவரையில் வழங்கி இருக்கின்றார்கள். அதில் 1,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட திருக்கோயில் களை புனரமைத்து பாதுகாக்க மட்டும் ரூ.300 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

இன்றைய தினம் வரை 1,855 திருக்கோயில்களில் குட முழுக்கு நடைபெற்றுள்ளது. 66 ஆண்டுகளுக்கு பிறகு பாம்பன் சுவாமிகள் திருக்கோயிலுக்கும், 100 ஆண்டுகளுக்கு பிறகு திருச்சி மாவட்டம், பூர்த்தி கோவில் திருமுக்தீஸ்வரர் திருக்கோயிலுக்கும், பெரியபாளையம், பவானியம்மன் திருக்கோயிலுக்கும் வருகிற 12 ஆம் தேதி குடமுழுக்கு நடைபெற உள்ளது. இப்படி எண்ணற்ற திருப்பணிகளை மேற்கொண்டு பணியாற்றி வருகின்ற இந்து சமய அறநிலையத்துறைக்கு தமிழ்நாடு அரசு எல்லா வகையிலும் ஒத்துழைப்பு நல்கி வருகிறது.

சென்னை, ராயப்பேட்டை, துர்கையம்மன் திருக்கோயில் இராஜகோபுரத்தை அகற்ற வேண்டுமென்பது எண்ணம் அல்ல. மெட்ரோ ரயில் வழித்தடத்திற்கான வரைபடங்களை தயாரிக்கின்ற போது அக்கோயிலின் கீழ் மெட்ரோ பணிகள் மேற்கொள்ள வேண்டிய நிலை இருப்பதால் அப்பணிகளை தொடங்குகின்ற போது ஸ்திரத்தன்மை இல்லாமல் இராஜகோபுரத்தில் பாதிப்பு ஏற்படும் என்பதால் அதை அகற்றுவதற்கு சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அது சம்பந்தமாக தற்போது நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருப்பதால் நீதிமன்றம் என்ன அறிவுரை கூறுகின்றதோ அதற்கு உட்பட்டு நிச்சயம் இந்த அரசும், சென்னை மெட்ரோ ரயில் நிறுவனமும், இந்து சமய அறநிலையத்துறையும் செயல்படும்.

இன்றைக்கு ஒரு மகிழ்ச்சியான நாள். சமூக நீதி மறுக்கப்படுகின்ற பல்வேறு மாநிலங்களில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் அமைந்திருக்கின்ற திராவிட மாடல் ஆட்சியானது தமிழ்நாட்டில் சமூகநீதியை நிலைநாட்டுகின்ற அரசாக செயல்பட்டுக் கொண்டு இருக்கின்றது. சிதம்பரம் நடராஜர் திருக்கோயிலில் கனக சபை மீது பக்தர்களை அனுமதிக்காத நிலையில் முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு தான் நீதிமன்றத்தின் மூலம் கனக சபையில் மீதேறி தரிசனம் செய்வதற்குண்டான உரிமையை பெற்று தந்தோம். திருமஞ்சனம் என்று காரணம் காட்டி, விழாக் காலங்களில் யாரையும் கனகசபையில் ஏற்றாத நிலையில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் திருமஞ்சனத்திற்கு கூட கனகசபையில் பக்தர்களை சட்டத்திற்கு உட்பட்டு அனுமதிக்க வேண்டும் என்ற உத்தரவிட்டதைத் தொடர்ந்து, இன்று காலை முதல் பக்தர்கள் மகிழ்ச்சியோடு கனகசபை மீதேறி சுவாமியை தரிசித்துக் கொண்டிருக்கின்றனர் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்து திராவிட மாடல் ஆட்சியிலே சமூக நீதி நிலைநாட்டப்படுகிறது என்பதற்கு இதை ஒரு உதாரணமாக சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

# ‘பதஞ்சலி’ நிறுவனத்தின் தடை செய்யப்பட்ட 14 போலி மருந்துகள்!

## தற்போதும் கடைகளில் விற்பனை செய்யப்படுவதாக குற்றச்சாட்டு!

சென்னை, ஜூலை 12 - தடை செய்யப்பட்ட 14 போலி மருந்துகளை பாபா ராம்தேவின் பதஞ்சலி நிறுவனம் தற்போதும் தனது கடைகளில் விற்பனை செய்து வருவதாக புகார் எழுந்துள்ளது.

பல்வேறு நோய்களை 100 சதவிகிதம் குணப்படுத்துவதாக கூறி பாபா ராம் தேவின் பதஞ்சலி நிறுவனம் போலி விளம்பரங்கள் வெளியிட்டது. இதனை எதிர்த்து இந்திய மருத்துவ சங்கம் உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது.

வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம், பதஞ்சலி நிறுவனத்துக்கும், பாபா ராம் தேவுக்கும் கடும் கண்டனம் தெரிவித்தது. இதனையடுத்து நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகிய பாபா ராம் தேவ் பகிரங்க மன்னிப்பு கோரினார். இருப்பினும், அடுத்தடுத்த விசாரணைகளில் பாபா ராம்தேவுக்கு உச்சநீதிமன்றம் அடுக்கடுக்கான கேள்விகளை எழுப்பி வருகிறது.

இந்நிலையில், உச்சநீதி மன்றம் பிறப்பித்த உத்தரவை தொடர்ந்து பதஞ்சலி நிறுவனத்தின் 14 மருந்துகளை உற்பத்தி செய்ய உத்தராகண்ட் அரசு தடை விதித்தது.

இதன் பின்னர் இந்த மருந்துகளை அனைத்து கடைகளில் இருந்தும் உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என்று உச்சநீதி மன்றம் உத்தரவிட்டது. நேற்று முன் தினம் வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்தபோது, நாடு முழுவதும் 5 ஆயிரத்து 600 கடைகளில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த இந்த 14 மருந்துகளும் திரும்பப் பெறப்பட்டதாக பதஞ்சலி தரப்பு வழக்கறிஞர் நீதி மன்றத்தில் தெரிவித்தார். ஆனால், தற்போதும் இந்த மருந்துகள் கடைகளில் விற்பனை செய்யப்பட்டு வருவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

டெல்லி, லக்னோ, பாட்னா, டேராடூன் ஆகிய நகரங்களில் ஆய்வு செய்ததில் தடை செய்யப்பட்ட 14 மருந்துகள் தற்போதும் விற்பனை செய்யப்பட்டு வருவது தெரிய வந்துள்ளது.



முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் 101 வது பிறந்த நாளையொட்டி தமிழ்நாடு முதலமைச்சரும் கழக தலைவருமான தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சருமான சு.முத்துசாமி வழிகாட்டுதலின்படி ஈரோடு தெற்கு மாவட்ட கழக வர்த்தகர் அணி சார்பில் மாவட்ட அமைப்பாளர் கே.எம்.ராஜசேகர், ஏற்பாட்டில் முத்துகவுண்டன் பாளையம் மரிய நிவாஸ் முதியோர் இல்லத்தில் உணவு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. நிகழ்வில் மாநகர கழக செயலாளர் மு.சுப்பிரமணியம் பொதுக்குழு உறுப்பினர் ஆர்.பொன்னுசாமி, மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் ஆர்.பி.பாலு, மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் ஜாகிர் உசேன், சின்னியம்பாளையம் செல்வகுமார், மாமன்ற உறுப்பினர் தண்டபாணி, மாநகர வர்த்தக அணி அமைப்பாளர் ஆர்.வெங்கடேஸ்வரன், மாவட்ட வர்த்தக அணி நிர்வாகிகள் கே.முத்துசாமி, ஜி.பாலுசாமி, மெஸ் பாலு, தேவேந்திரன், மணல் முருகேஷ், வினோத் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளரும், சிதம்பரம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.பாலகிருஷ்ணனின் சகோதரர் கே.ராதாகிருஷ்ணன் இயற்கை எய்தினார். தகவலறிந்த அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அன்னாரின் உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார். கே.பாலகிருஷ்ணன் மற்றும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்,. உடன் காட்டுமன்னார்கோயில் சட்டமன்ற உறுப்பினர் ம.செ.சிந்தனைச் செல்வன், மற்றும் தி.மு.க கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் அஞ்சலி செலுத்தினர்.

### மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர்

# கே.பாலகிருஷ்ணன் சகோதரர் கே.ராதாகிருஷ்ணன் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜூலை 12 - மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர் கே.பால கிருஷ்ணன் அவர்களின் இளைய சகோதரர் கே.இராதா கிருஷ்ணன் (வயது 66) , சிதம்பரம் அருகே அண்ணாமலை நகர் பேரூராட்சிக்குட்பட்ட திடல் வெளி பகுதியில் வசித்து வந்த நிலையில் 9.7.2024 - செவ்வாய்க்கிழமை அன்று மாலை உடல் நலக் குறைவால் இயற்கை எய்தினார்.

அன்னார் மறைவுற்ற செய்தியறிந்து அவரது மறைவுக்கு இரங்கல் தெரிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்த



செய்தி வருமாறு:-

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தோழர் கே.பால கிருஷ்ணன் அவர்களது சகோதரர் ராதாகிருஷ்ணன் அவர்கள் மறைந்த துயரச் செய்தியறிந்து, தோழர் பால கிருஷ்ணன் அவர்களைத் தொலைபேசி வாயிலாகத் தொடர்புகொண்டு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்தேன்.

ராதாகிருஷ்ணன் அவர்களது பிரிவால் வாடும் அவரது குடும்பத்தினர் - உறவினர்கள் - நண்பர்கள் என அனைவருக்கும் ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அந்த இரங்கல் செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

# அண்ணாமலை வழக்கைச் சந்திக்கத் தயார்!

## ஆர்.எஸ்.பாரதி பதிலடி!

சென்னை, ஜூலை 12- தமிழ்நாட்டில் பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை தன்மீது வழக்கு தொடர்ந்தது பற்றி தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி கூறியதாவது:

கள்ளக்குறிச்சி சம்பவம் தொடர்பாக அவருக்கு நான் ரூ.2 கோடி நஷ்ட ஈடு கேட்டு நோட்டீசு அனுப்பி இருந்தேன். அதற்கு அவரிடம் இருந்து பதில் இல்லை.

இப்போது கோர்ட்டுக்குச் சென்றுள்ளார். அதை சந்திக்கத் தயார். அண்ணாமலை மீது பல குற்றச் சாட்டுகள் உள்ளன. அவற்றை ஒவ்வொன்றாக கோர்ட்டில் நிரூபிப்போம்.



சென்னை விமான நிலையத்தில் ரூ.167 கோடிக்கு தங்கம் பிடிபட்ட விவகாரத்தை திசை திருப்ப கோர்ட்டுக்குச் சென்றுள்ளார். யாரும் அதைப் பற்றி பேச மாட்டார்கள். பயந்து விடுவார்கள் என நினைக்கிறார். குற்றவாளியுடன் அவர் இருக்கும் புகைப்படம் வெளி வந்துள்ளதே?

பா.ஜ.க. தலைவர்களின் புகைப்படம் வந்ததற்கு இன்னும் அவர் பதில் சொல்லவில்லையே?

இப்போது கோர்ட்டில் என்ன கூறி உள்ளார் என முழுமையாக தெரியவில்லை. அதன் நகல் கிடைத்தது. பார்த்துவிட்டு உரிய வகையில் வழக்கை சந்திப்பேன்.

கள்ளக்குறிச்சி விவகாரம் சம்பந்தமாக அண்ணாமலை மீது ரூ.2 கோடி நஷ்டஈடு கேட்டு 4ஆம் தேதி நோட்டீசுக்கு பதில் அனுப்பி உள்ளேன். அதை 6ஆம் தேதி அவரது வக்கீல் பால் கனகராஜ் வாங்கி இருப்பார் என கருதுகிறேன்.

அண்ணாமலை பற்றி நிறைய தகவல்கள் வெளிவரத் தொடங்கி விட்டன. நான் மட்டுமல்ல, மற்ற தலைவர்களும் இதுபற்றி பேச ஆரம்பித்துவிட்டனர். இனிமேல் அண்ணாமலை பற்றி ஒவ்வொன்றாக வெளிவரும். என்னைப் போல் மற்ற தலைவர்களும் வெளியிடுவார்கள்.

இவ்வாறு ஆர்.எஸ். பாரதி கூறினார்.

### ‘தலித்துகளை பா.ஜ.க. புறக்கணிக்கிறது!’

# கர்நாடக பா.ஜ.க. எம்.பி. குற்றச்சாட்டு!

பெங்களூரு, ஜூலை 12 - தலித்துகளை பா.ஜ.க. புறக்கணிப்பதாக மக்களவைக்கு 7 முறை தேர்ந்தெடுக்கப்பட்ட கர்நாடக பா.ஜ.க. எம்.பி. ரமேஷ் ஜிகன்ஜினாகி குற்றம் சாட்டி உள்ளார்.

கடந்த மக்களவைத் தேர்தலில் கர்நாடக மாநிலம் விஜயபுரா தொகுதியில் போட்டியிட்ட ரமேஷ் ஜிகன்ஜினாகி, ஏழாவது முறையாக வெற்றி பெற்றார்.

மேலும் பிரதமர் மோடியின் முதல் அமைச்சரவையில் குடிநீர் மற்றும் சுகாதார துறை இணை அமைச்சராக பதவி வகித்தார். இம்முறை ஒன்றிய அமைச்சர் பதவி கிடைக்கும் என்று எதிர்பார்த்தார். ஆனால், கிடைக்கவில்லை.

இதனால் அதிருப்தி அடைந்த அவர் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார்.

அப்போது, தென்னிந்தியாவில் இருந்து 7 முறை நாடாளுமன்றத்துக்கு தேர்வான ஒரே தலித் எம்.பி. தான்தான் என்றும் உயர் சாதி எம்.பி.க்களுக்கு கேபினட் பதவி கொடுக்கப்பட்டுள்ளதாகவும், ஆனால், தான் தலித் என்பதால் பா.ஜ.க. தன்னை புறக்கணிப்பதாகவும் குற்றம் சாட்டினார்.

மக்களவைக்கு 7 முறை தேர்வான தனக்கு ஏன் கேபினட் அமைச்சர் பதவி கொடுக்கவில்லை? தலித்துகளை பா.ஜ.க. ஆதரிக்காதது ஏன்? என கேள்விகளை எழுப்பிய ரமேஷ் ஜிகன்ஜினாகி, கர்நாடகா பா.ஜ.க.வில் சிலர், தனக்கு எதிராக செயல்படுவதாகவும் புகார் தெரிவித்தார்.



பீளமேடு பகுதி3 வார்டு எண்: 51,சவுரி பாளையம்,இந்திரா நகர் பகுதிகளில், கோவை மாநகர் மாவட்ட இளைஞர் அணி சார்பில்,கோவை மாநகர் மாவட்ட திமுக செயலாளர் நா.கார்த்திக் EX.எம்எல்ஏ., கோவை மாநகர் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் இரா.தனபால், துணை அமைப்பாளர் க.மணிகண்டன் மேற்பார்வையில், பீளமேடு பகுதி3 பகுதி செயலாளர் இரா. சேரலாதன் தலைமையில்,51 வது வட்டக் கழகச் செயலாளர் க.மணிகண்டன் முன்னிலையில், இல்லந்தோறும் இளைஞர் அணிஉறுப்பினர் சேர்க்கை முகாம் நடைபெற்றது.மாநகர் மாவட்ட துணைச் செயலாளர் கோட்டை அப்பாஸ், மாநகர் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் லாரா பிரேம்தேவ்,பொதுக்குழு உறுப்பினர் நோயல் செல்வம், வட்டக் கழகச் செயலாளர் வார்டு எண்:53 ம.சிவக்குமரன்,கோவை மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர் சு.தனபால், இளைஞரணி கார்த்திக், மில் தண்டபாணி, நாகராஜ், ரங்கநாதன், மகேந்திரமணி, கே.சின்னச்சாமி, ராமதாஸ், இளைஞரணிசுபாஷ், ரங்கநாதன், சதீஷ்குமார், சுரேஷ், நாகராஜ்,சேகர், பிரவீன், கணேசன், சேகர், பிரகாஷ்,பிரபு, கழக நிர்வாகிகள், இளைஞர்கள்,கழக உடன்பிறப்புக்கள் கலந்து கொண்டனர்.